

*Photo Credit*: Studio Times Ltd.

# முக்கிய பொருளாதார ஊக்குவிப்புக் காரணிகளில் காலநிலைக்கான தாக்குப்பிடித்தலை மேம்படுத்தல்

கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக இடம்பெற்ற யுத்தத்தில் இருந்து மீண்டெழுந்ததன் பின்னர், நாட்டின் அபிவிருத்தியை மீளக் கட்டியெழுப்புவதற்கும் முன்னுரிமைப்படுத்துவதற்கும் இலங்கை முற்பட்டுள்ளது. வீதி, புகையிரதம் விமானப் போக்குவரத்து, வீடமைப்பு மற்றும் மின்வலு என்பவற்றை இலக்காக வைத்து பொருளாதார உட்கட்டமைப்புக்களை அடுத்துவரும் தசாப்தங்களில் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்குச் சமாந்தரமாக, சுற்றாடற் துறை மற்றும் கப்பல் போக்குவரத்து போன்ற முக்கிய தொழிற்துறைகளும் விரிவாக்கப்படுகின்றன மற்றும் நவீனமயப்படுத்தப்படுகின்றன. 2006 - 2016 வரையிலான பத்து ஆண்டு கால அபிவிருத்திக் கட்டமைப்பான அரசாங்கத்தின் அபிவிருத்திக் கொள்கை ஆவணம்: புதிய இலங்கைக்கான தூர நோக்கொன்றான “மஹிந்த சிந்தனை” மற்றும் மஹிந்த சிந்தனை: ஒளிமயமான எதிர்காலம் (இதிரி தக்ம) ஆகியவற்றின் அடிப்படையில், 2007 முதல் 2016 ஆம் ஆண்டு காலத்திற்குள்ளான முழுமையான முதலீடு 1.4 டிரிலியன்கள் (கிட்டத்தட்ட 12.5 பில்லியன் அமெரிக்க டாலர்கள்) ஆகும். இம் முதலீடுகள் நாட்டின் உட்கட்டமைப்பு, பொருளாதாரம் மற்றும் சமூகம் என்பவற்றில் மாற்றங்களை ஏற்படுத்தும்.

இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கு இயலளவுகளை வலுப்படுத்துதல்

தேசிய காலநிலை மாற்ற இசைவாக்க உபாயம்

உபாய வழியின் பிரிவு **#4**

என்றாலும், அறியப்பட்ட மற்றும் ஏற்பட வாய்ப்புள்ள விளைவுகளில் இருந்து இந்த முதலீடுகளை காப்பதற்கு போதிய திட்டமிடல்கள் மூலம் அவதானம் செலுத்தப்படாவிடில், மனிதனால் ஊக்குவிக்கப்பட்ட உலகளாவிய வெப்பமாதலின் பிரதிபலிப்பாகத் தோற்றுவிக்கப்படும் காலநிலை மாற்ற விளைவுகளினால் இவ் அபிவிருத்தித் திட்டங்கள் பாதிப்படையலாம்.

# காலநிலை மாற்ற விளைவுகள்

காலநிலை மாற்ற விளைவுகளுக்கு சில முக்கிய பொருளாதாரத் துறைகள் விசேடமாக நலிவுத்தன்மை உடையவையாக அமைந்திருக்கலாம்.

உதாரணமாக:

- மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த எமது பாதைகளும், இரயில் பாதைகளும் கரையோரத்தின் ஊடாகவே செல்கின்றன. காலத்திற்குக் காலம் இவை கடல் அரிப்பிற்கு முகங்கொடுத்து வருகின்றது. கடல் மட்ட உயர்வு, கடல் நீர் உட்புகுதல் மற்றும் நிலையான கடல் அரிப்பு என்வற்றினால் இப் பொருளாதார உயிர் நாடிகள் மேலும் பாதிப்படையலாம் அல்லது அழிவடையலாம்.
- அழகிய கடற்கரைகள் மற்றும் வனஜீவிகள் நிறைந்த காடுகள் என்பன உல்லாசப் பிரயாணிகளை கவரும் முக்கிய துறைகளில் உள்ள விடயங்களாகும். காலநிலை மாற்றமானது இவை அணைத்திலும் பாதிப்புக்களை ஏற்படுத்துவதோடு, எதிர்கால உல்லாசப் பயணத்துறையில் இது பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும்.
- நாட்டின் சில பிரதேசங்களில் வருடந்தோரும் வெள்ளப்பெருக்குகளையும், மண்சரிவுகளையும் நாம் எதிர்கொள்கின்றோம். காலநிலை மாற்றம் இவ் அனர்த்தங்களின் அளவிலும் வீரியத்திலும் மேலும் அதிகரிப்பை ஏற்படுத்துவதோடு, உட்கட்டமைப்பு மற்றும் பொருளதாரம் என்பவற்றிலும் அழுத்தங்களை அதிகரிக்கச் செய்யும்.

உணவுப் பாதுகாப்புத் தொடர்பில் காலநிலை மாற்ற விளைவுகளை எதிர்கொள்வதற்கு ஒன்றிணைக்கப்பட்ட அணுகுமுறை அவசியமாகின்றது. நீர்ப்பாசனம், விவசாயம், மீன்பிடித்துறை, போசாக்கு (சுகாதாரம்) மற்றும் சூழற் காரணிகளை இவை கருத்திற்கொள்ள வேண்டும்.



*Photo Credit:* Studio Times Ltd.



*Photo Credit:* Studio Times Ltd.

# விடயத் தலைப்பு

உல்லாசப் பிரயாணத்துறை, போக்குவரத்து மற்றும் பொருளாதார விவசாயம் போன்ற முக்கிய பொருளாதார ஊக்குவிப்புக் காரணிகளில் காலநிலைக்கான தாக்குப்பிடித்தற் தன்மையை மேம்படுத்துவதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட அணுகுமுறை ஒன்று அவசியமாகின்றது. தேசிய காலநிலை மாற்ற இயல்பாக்க உபாயத்தை தயார் செய்வதற்கான மதியுரை பெற்றுக்கொள்ளல் செயன்முறையின் போது, நில மற்றும் நீர் வளங்கள், அத்துடன் உணவுப் பாதுகாப்பு என்பன தொடர்பான முக்கிய பிரச்சினைகளையும், இசைவாக்கச் செயற்பாடுகளையும் பங்களிப்பாளர்கள் அடையாளங் கண்டார்கள். இவற்றை பின்வரும் விடயத் தலைப்புக்களில் ஒன்று சேர்க்க முடியும்.

**உட்கட்டமைப்புக்களில் காலநிலை மாற்ற விளைவுகளைக் குறைத்தல்**

பாதைகள், இரயில் தண்டவாளங்கள், வடிகால்கள் மற்றும் ஏனைய உட்கட்டமைப்புக்கள் பல காலநிலை மாற்றங்களை கவனத்திற்கொண்டு விருத்தி செய்யப்பட்டவை அல்ல. சில நிலைமைகளை பொறுத்தவரை இவை முக்கியத்துவமற்றவையாக அமைந்திருப்பதோடு, சில நிலைமைகளை பொறுத்தவரை இவை முக்கிய காரணிகளாகக் காணப்படுகின்றன. உதாரணமாக, கடல் மட்ட அதிகரிப்பினால் சில கரையோரப் பிரதேசங்களில் உள்ள பாதைகளும், இரயில் தண்டவாளங்களும் மூழ்கடிக்கப்படலாம். எத்தகைய தேசிய உட்கட்டமைப்புக்கள் அதிகம் பாதிக்கப்படலாம் மற்றும் அவற்றின் காலநிலைக்குத் தாக்குப்பிடிக்கும் திறனை எவ்வாறு சிறப்பாக அதிகரிக்கச் செய்யலாம் என்பது தொடர்பாக நாம் முதலில் ஆய்வு செய்து மதிப்பிட வேண்டும். இவற்றில் சிலவற்றை வலுப்படுத்த அல்லது மீள் வலுவூட்ட வேண்டியுள்ள அதேநேரம், சிலவற்றை முழுமையாக வேறு இடங்களுக்கு அகற்ற வேண்டியுள்ளது. அத்துடன், சில தொழிநுட்பங்கள் முழுமையாக நீக்கப்படல் வேண்டும் உதாரணமாக, எதிர்வரும் காலங்களில் எதிர்பார்க்கப்படும் வெப்பநிலை அதிகரிப்பினால், பாதைகளுக்குப் பயன்படுத்தப்படும் தாரை தொடர்ந்தும் பயன்படுத்த முடியாத நிலை தோன்றலாம்.

**பெருந்தோட்டத்துறையில் காலநிலை மாற்ற விளைவுகளைக் குறைத்தல்**

தேயிலை, இறப்பர் மற்றும் தேங்காய் போன்ற பிரதான பெருந்தோட்டப் பயிர்களில் காலநிலை மாற்றம் எவ்வாறு பாதிப்பைச் செலுத்தும் என்பது தொடர்பாக விஞ்ஞானிகள் இன்னும் ஆய்வுகளை மேற்கொண்டுள்ளார்கள். இவ் அபாயம் தொர்பாக பெருந்தோட்டத்துறையில் உள்ள ஒரு சிலரே அறிந்து வைத்துள்ளதோடு, இலங்கையின் வெளிநாட்டு செலாவணியை ஈட்டுவதில் முக்கிய பங்கு வகிக்கும் இத் தொழிற்துறையை பாதுகாக்கும் நோக்கில் தாக்குப் பிடித்தல் நடவடிக்கைகளுக்கான திட்டங்கள் எதுவும் இதுவரை முன்னெடுக்கப்படவில்லை. காலநிலை மாற்றமானது அச்சுறுத்தல்கள் மற்றும் வாய்ப்புக்கள் ஆகிய இரண்டு வழிகளையும் முன்வைக்கலாம் - முன்னோக்கிச் செல்வதற்கான சிறந்த வழிகளை சிறப்பாக இலக்குவைக்கப்பட்ட ஆய்வுகள் வெளிப்படுத்த முடியும்.

**காலநிலை மாற்ற விளைவுகளுக்குத் தாக்குப்பிடிப்பதற்கு முக்கிய தொழிற்துறைகளுக்கு உதவுதல்**

வியாபாரத்தை மேற்கொள்வதில் அன்றாடச் சவால்களில் சிக்கியுள்ள தனிப்பட்ட தொழிற்துறையாளர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்களினால், மெதுவாக வெளிப்படுத்தப்படும் அச்சுறுத்தல்கள் (அல்லது வாய்ப்புக்கள்) தொடர்பாக நீண்டகால நோக்கொன்றை காண்பதற்கு நேரம் கிடைப்பது அரிதானதாகும். தேசிய திட்டமிடலாளர்கள், தொழிற்சாலைக் கட்டுபாட்டாளர்கள், வங்கியாளர்கள் மற்றும் முதலீட்டாளர்கள் தொடர்பிலும் இந்த நிலை உண்மையானதாகும். வழமையான அணுகுமுறையின் அடிப்படையில் இருந்து இவ் வியாபாரங்களை மாற்றுவதற்கு காலநிலை மாற்றம் எமக்கு அழுத்தம் கொடுத்தவண்ணம் உள்ளது. நடுத்தர மற்றும் நீண்டகால அடிப்படையில் நாம் சிந்திக்க வேண்டியுள்ளதோடு, இது பற்றிய பாரிய பின்னணி தொடர்பான பரந்த தொகுப்பொன்றையும் நாம் ஏற்படுத்த வேண்டும். தொழிநுட்ப ரீதியிலான முகாமையாளர்களுடனும், தொழிற்சாலை இணைப்புக்களுடனும், பாரிய தொழிற்சாலைகளின் பல்வேறு மட்டங்களுடன் இத்தகைய கலந்துரையாடல்களை ஆரம்பிக்கலாம் மற்றும் ஏனையவற்றை உள்ளடக்குவதற்கு இதனை படிப்படியாக விரிவுபடுத்தலாம்.

**முக்கிய பொருளாதாரத் துறைகளுக்கான காலநிலை தாக்குதலுக்குள்ளாகும் தன்மை தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்**

முக்கிய பொருளாதாரத் துறைகளில் காலநிலை விழிப்புணர்வு தற்போது குறைவானதாகவும், தெளிவற்றதாகவுமே காணப்படுகின்றது. காலநிலை தாக்குதலுக்குள்ளாகும் தன்மைகள், இசைவாக்கத் தெரிவுகள் மற்றும் அதற்கான செலவுகள் தொடர்பான விழிப்புணர்வையும், தெளிவையும் ஏற்படுத்துவதன் முக்கியத்துவத்தை இது வெளிப்படுத்தி நிற்கின்றது. பொருளாதாரத் துறையில் காலநிலை மாற்ற அபாயங்களுக்கான காரணிகள் தொடர்பாக நடுநிலையான அணுகுமுறை ஒன்று அவசியமாகின்றது. உதாரணமாக, சூழல் நிலைப்பு மற்றும் கடமைகள் தொடர்பாக “சூழல் விளைவு மதிப்பீட்டிலேயே” உல்லாசப் பிரயாண விடுதி நிர்மாணிப்பாளர்கள் தங்கியிருக்கின்றார்கள். காலநிலை மாற்றம் தொடர்பான ஆர்வங்கள் இன்னும் “சூழல் விளைவு மதிப்பீட்டு” கட்டமைப்பின் பகுதி ஒன்றாக சேர்க்கப்படவில்லை. தொழில் வாய்ப்புக்களையும், வருமானத்தையும் ஈட்டித்தரும் தொழிற்சாலைகளில் சூழல் மாற்ற விளைவுகளால் ஏற்படுத்தப்பட வாய்ப்புள்ள பாதிப்புக்கள் பற்றி உள்ளூர் சமூகங்கள் இன்னும் அறிவூட்டப்படவில்லை.



*Photo Credit:* Studio Times Ltd.



*Photo Credit*: Studio Times Ltd.

காலநிலை மாற்றத்தின் நிச்சயமற்ற விளைவுகளுடன் வாழ்வது மற்றும் அதற்குத் தாக்குப்பிடிப்பது என்பது தொடர்ந்தும் தெரிவொன்றாக அமையாது; மாற்றமாக அது அத்தியாவசியான விடயம் ஒன்றாகவே மாறியிருக்கின்றது. பொருளாதார அபிவிருத்தி தங்குதடைகள் அல்லது பின்னடைவுகள் இன்றி தொடர்வதற்கு மற்றும் வறுமை ஒழிப்பு, உணவும், நீர் பாதுகாப்பும் மற்றும் பொது சுகாதாரம் என்பவற்றில் மேற்கொள்ளப்பட்டுள்ள முதலீடுகள் அழிவடையாவண்ணம் பேணப்படுவதற்கு, காலநிலை மாற்றங்களுக்கு இலங்கை இசைவாக்கத்தை ஏற்படுத்துவது அவசியமாகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் தொழிநுட்ப உதவிக்கான செயற்திட்டம் ADB TA 7326 SRI: “இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கான இசைவாக்கத்திற்கான இயலளவுகளை வலுப்படுத்துதல்” செயற்திட்டத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடுகளின் அடிப்படையில் இத் துண்டுப்பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

நிலையான பொருளாதார அபிவிருத்தியை உறுதிப்படுத்தும் அதேநேரம், காலநிலை மாற்ற விளைவுகளுக்கு தாக்குப் பிடிக்கும் திறனை இலங்கையில் அதிகரிப்பதற்கு காலநிலை மாற்ற இசைவாக்கத்திற்கான தேசிய உபாயங்களை உருவாக்குதற்காக இலங்கை சுற்றாடல் அமைச்சுடன் ஆசிய அபிவிருத்தி வங்கி பணியாற்றுகின்றது. இசைவாக்கங்களை ஏற்படுத்தும் பட்சத்தில், சூழல் முகாமைத்துவத்தின் மேம்படுத்தப்பட்ட விளைவுகள் மற்றும் இலங்கையில் காலநிலை மாற்றத்திற்கு இசைவாக்கத்தை ஏற்படுத்துவதற்கு பங்களிப்பாளர்களை சிறப்பாகத் தயார்படுத்தப்படுத்தல் என்பற்றை இவ் உபாயம் ஊக்குவிக்கும்.

**மேலதிக தகவல்களுக்கு தொடர்புகொள்ளவும்:**
காலநிலை மாற்றத்திற்கான செயலகம், சுற்றாடல் அமைச்சு
முதலாம் மாடி, 980/4 A, விக்ரமசிங்ஹ பிளேஸ், அதுல் கோட்டை, கோட்டை, இலங்கை.
தொலைபேசி:: +94 11 2883 481 மற்றும் +94 11 2883 368
இணையம்: http://www.climatechange.lk/adaptation/